இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 46 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – புரட்டாசி 08 – வெள்ளிக்கிழமை 25 செப்டம்பர் 2026 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 46 : Thiruvalluvar Year - 2057 - Purattasi 08 - Friday 25 September 2026 - Madurai 8 Pages ₹ 5.00

## SIR–க்குப்பின் நடந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் அனைத்தும் கேள்விக்குறி! தனி ஆவர்த்தனம் செய்த

# தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை உடனே நீக்கிடுக!

## இனியும் பதவியில் நீடிக்கக் கூடாது எனவும் வலியுறுத்தி - தலைவர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

**சென்னை, செப்.25-**

**“தனி ஆவர்த்தனம் செய்த தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் இனியும் பதவியில் நீடிக்கக் கூடாது: உடனடியாக அவர் நீக்கப்பட வேண்டும்” என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-**

சிறப்புத் தீவிர திருத்தம் (SIR) என்ற பெயரில் வாக்காளர் பட்டியலில் இருந்து கோடிக்கணக்கான மக்களின் பெயர்களை நீக்கும் முடிவுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வந்தோம்.

ஒவ்வொரு மாநிலத்திலும் தேர்தலுக்குச் சில மாதங்களுக்கு முன்பு அவசரகதியில் நடத்தப்பட்ட இந்தப் பணியில் பல குளறுபடிகள் நடந்தன. மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநிலங்கள் போர்க்களம் ஆயின.

### SIR–க்குப் பின் நடந்த தேர்தல் முடிவுகள் கேள்விக்குறி!

இந்நிலையில், இன்று ‘தி இந்தியன் எக்ஸ்பிரஸ்’ நாளேட்டில் அடுக்கடுக்கான ஆதாரங்களுடன் வெளியாகியுள்ள செய்தி, SIR-க்குப் பின்பு நடந்த அனைத்துச் சட்டமன்றத் தேர்தல் முடிவுகளையும் கேள்விக்குள்ளாக்கி உள்ளது.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் அவர்கள் மற்ற தேர்தல் ஆணையர்கள் இருவரின் ஒப்புதல் இல்லாமல் தன்னந்தனியாக, இரகசியமாகச் செயல்பட்டு வந்துள்ளது அம்பலம் ஆகியுள்ளது.

மூன்று தேர்தல் ஆணையர்களில் சுக்பிர் சிங் சந்து மற்றும் விவேக் ஜோஷி ஆகிய இருவருக்கும், தேர்தல் கமிஷனில் என்ன நடக்கிறது என்பதே தெரியாமல் மறைத்து வைக்கப்பட்ட செய்தி நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தி இருக்கிறது.

தங்களுக்குத் தெரியாமல் முடிவுகள் எடுக்கப்படுவது குறித்து, 10 மாதங்களில் 14 முறை அவர்கள் ஆட்சேபணை தெரிவித்தும் அவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளது, தேர்தல் ஆணையம் மீதான நம்பகத்தன்மையையே முற்றிலுமாகச் சீர்குலைத்துள்ளது.



### இந்திய ஜனநாயகத்தின் மீது தொடுக்கப்பட்ட மோசமான தாக்குதல்!

“தேர்தல் ஆணையர்கள் மூவரும் ஒருமித்த கருத்தின் அடிப்படையில் முடிவுகளை மேற்கொள்ள வேண்டும். அது சாத்தியமாகாத நிலையில், பெரும்பான்மையின் அடிப்படையில் முடிவுகள் அமைய வேண்டும் என்பதுதான் தேர்தல் ஆணைய விதி.

ஆனால், மூவரில் இருவருக்குத் தாங்கள் பொறுப்பு வகிக்கும் அமைப்பில் என்ன நடக்கிறதென்பதே தெரியாமல் இருந்திருக்கிறதென்றால், இதனைச் சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. இந்திய ஜனநாயகத்தின் மீது தொடுக்கப்பட்ட மிக மோசமான தாக்குதல் இது.

சுதந்திரமாகவும் - வெளிப்படைத்தன்மையோடும் - அரசியல் குறுக்கீடுகள் இல்லாமலும் செயல்பட வேண்டிய உச்ச அமைப்பின் மீது மிகப் பெரும் களங்கம் படிந்துள்ளது.

### தகுதியுள்ள வாக்காளர்கள் பெயர் பட்டியலில் சேர்க்க முடியவில்லை!

“நீதிமன்றமே தலையிட்டு வாக்காளர் பட்டியலில் சேர்க்கச் சொன்ன பிறகும், அவர்களது பெயர்களைச் சேர்ப்பதற்கு எதிராக மேல்முறையீடுகள் செய்யப்பட்டுள்ளன. யார் இதனைச் செய்தது? அதுகுறித்துக் கூட எங்களுக்குத் தெரியவில்லை.

சட்டப்படி வாக்காளர் பட்டியலில் திருத்தங்களைச் சரிபார்த்து மேற்கொள்ள ERO எனப்படும் வாக்காளர் பதிவு அலுவலர்களுக்கு அதிகாரம் உண்டு. ஆனால், தகுதியுள்ள வாக்காளர்களாக அங்கீகரிக்கப்பட்டவர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் அவர்களால் சேர்க்க முடியவில்லை. அதைச் செய்வதற்கான ERONet வலைதளம் முற்றிலுமாக ஒருவரின் கட்டுப்பாட்டில் இருந்தது.” என இரண்டு தேர்தல் ஆணையர்களும் தெரிவித்துள்ளார்கள் என்றால், தேர்தல் ஆணையத்தில் எந்த அளவுக்கு அரசியல் குறுக்கீடுகள் இருந்திருக்கும் என்பது தெள்ளத் தெளிவாகிறது.

### SIR நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும்!

ஏற்கெனவே, கடந்த மார்ச் மாதத்தில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் அவர்களைப் பதவி நீக்கம் செய்ய திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் நோட்டீஸ் கொடுத்தோம்.

> ### தேர்தல் ஆணையம் மீதான நம்பகத்தன்மையையே முற்றிலுமாகச் சீர்குலைத்துள்ளது!
>
> **தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் அவர்கள் மற்ற தேர்தல் ஆணையர்கள் இருவரின் ஒப்புதல் இல்லாமல் தன்னந்தனியாக, இரகசியமாகச் செயல்பட்டு வந்துள்ளது அம்பலம் ஆகியுள்ளது.**
>
> **மூன்று தேர்தல் ஆணையர்களில் சுக்பிர் சிங் சந்து மற்றும் விவேக் ஜோஷி ஆகிய இருவருக்கும், தேர்தல் கமிஷனில் என்ன நடக்கிறது என்பதே தெரியாமல் மறைத்து வைக்கப்பட்ட செய்தி நாடுமுழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தி இருக்கிறது. தங்களுக்குத் தெரியாமல் முடிவுகள் எடுக்கப்படுவது குறித்து, 10 மாதங்களில் 14 முறை அவர்கள் ஆட்சேபணை தெரிவித்தும் அவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளது தேர்தல் ஆணையம் மீதான நம்பகத்தன்மையையே முற்றிலுமாகச் சீர்குலைத்துள்ளது.**

இனியும் அவர் அந்தப் பதவியில் நீடிக்கக் கூடாது. ஞானேஷ் குமார் அவர்களை உடனடியாகப் பதவி நீக்கம் செய்ய வேண்டும். SIR நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும். இதுவரை தேர்தல் ஆணையத்தில் நடந்த அனைத்தும் நியாயமான முறையில் விசாரிக்கப்பட்டு இதற்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் எனத் தி.மு.க. சார்பில் வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

## இதுவரை, தேர்தல் ஆணையத்தில் நடந்த அனைத்தும் நியாயமாக விசாரிக்கப்பட்டு பொறுப்பானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்!

---

### தமிழகத்தில் தொடரும் மின்வெட்டு!

## 7 அமைச்சர்கள் பங்கேற்ற கூட்டத்திலேயே மின்தடை!

### வேலையிழக்கும் தொழிலாளர்கள்!

*திருப்பூர், செப்.25-*

*திருப்பூர் மாவட்டம் தாராபுரம் தொகுதியில் நேற்று காலை நடைபெற்ற செங்கோட்டையன், அருண்ராஜ் உள்ளிட்ட 7 அமைச்சர்கள் பங்கேற்ற தேர்தல் பரப்புரைக் கலந்தாய்வுக் கூட்டத்தின் போது மின் தடை ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் அறிவிக்கப்படாத மின்வெட்டும், அடிக்கடி ஏற்படும் மின் தடைகளும் அதிகரித்து வருகிறது.*

*தமிழ்நாட்டில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தலைதூக்கிய மின்வெட்டு, தற்போது மாநிலம் முழுவதும் பற்றிக்கொண்டிருக்கிறது என்றும் இதன் தாக்கம், வீடுகளைத் தாண்டி விவசாயம், சிறு, குறு தொழில்களிலும் எதிரொலித்திருக்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளது. மின் வெட்டால் வீடுகளுக்குள் புழுக்கத்தில் உழன்ற மக்கள், தெருவில் இறங்கிப் போராடும் நிகழ்வுகளும் அரங்கேறிவருகின்றன என்று ஆனந்த விகடன் விமர்சித்துள்ளது.*

*தலைநகர் சென்னையில் அறிவிக்கப்படாத மின்வெட்டு காரணமாக பொதுமக்கள் சாலையில் இறங்கியும், மின்வாரிய அலுவலகத்தை முற்றுகையிட்டும் போராட்டம் நடத்துகின்றனர் என்றும் சென்னை புறநகர்ப் பகுதிகளிலும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மின்தடை செய்யப்படுகிறது என்றும் ஆனந்த விகடன் குறிப்பிட்டுள்ளது. கோவை மாவட்டத்தில் ஒரு நாளைக்குப் பத்து முறைக்கும் மேல் மின் நிறுத்தம் செய்யப்படுகிறது. அதிகபட்சம் ஒரு மணி நேரம் முதல் இரண்டு மணி நேரம் வரை மின்தடை ஏற்படுகிறது.*

*ஒசூர் பகுதியில் சிறு, குறு தொழில் நிறுவனங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுவருகின்றன. சேலம் மாவட்டத்தில் மின்தடையால் தறிகளில் நெய்யப்பட்டுக்கொண்டிருக்கும் துணிகள் சேதமடைவதோடு, தொழிலாளர்களின் அன்றாடக் கூலியும் பறிபோகிறது. திருப்பூர் மாவட்டத்தில், ஆடை உற்பத்தி, வணிக நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.*

*தொழில் நகரமான கோவில்பட்டியில் மின்தடையால் தீக்குச்சித் தொழில், கடலைமிட்டாய் தயாரிப்பு போன்ற குடிசைத் தொழில்களும் பாதிக்கப்பட்டுள்ளன.*

*மதுரையைச் சுற்றியுள்ள கிராமங்களில் ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறை 15 நிமிடங்கள் மின்தடை ஏற்படுகிறது.*

*இரவு நேரங்களில் இரண்டு முதல் ஐந்து மணி நேரம் வரை மின் தடை ஏற்படுகிறது. மானாவாரி விவசாயம் நடக்கும் தருமபுரி மாவட்டத்தில், தண்ணீரைப் பணம் கொடுத்து வாங்கும் சூழலுக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.*

*தேனி மாவட்டத்தில் தொடர்ச்சியாக எட்டு மணி நேரத்துக்கும் மேலாக மின்சாரம் தடைப்படுவதால், விவசாயம் பாதிக்கப்படுகிறது. எந்தெந்தப் பகுதிகளில், எவ்வளவு நேரம் மின் விநியோகத்தை நிறுத்தி, ஆன் செய்ய வேண்டும் என அந்தந்த மின் நிலைய உதவிப் பொறியாளர்கள் பட்டியலே போட்டுக் கொடுத்திருப்பதாகவும் ஆனந்த விகடன் இதழ் குறிப்பிட்டுள்ளது.*

---

## தலைமை தேர்தல் ஆணையருக்கு எதிராக வழக்குத் தொடர முடிவு!

### அனுமதி கோரி ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்ற வழக்கறிஞர் கடிதம்!

*புதுடெல்லி, செப்.25-*

*தலைமை தேர்தல் ஆணையருக்கு எதிராக வழக்கு தொடர அனுமதி கோரி ஒன்றிய அரசின் அட்டர்னி ஜெனரலுக்கு உச்சநீதிமன்ற வழக்கறிஞர் பிரிஜேஷ் சிங் கடிதம் எழுதி உள்ளார்.*

*ஒன்றிய அரசின் அட்டார்னி ஜெனரல் வெங்கட் ரமணிக்கு உச்சநீதிமன்ற வழக்கறிஞர் பிரிஜேஷ் சிங் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அதில், தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் தொடர்பான உச்சநீதிமன்றத்தின் முந்தைய தீர்ப்புகளை மீறும் வகையில் தலைமை தேர்தல் ஆணையர் செயல்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சக தேர்தல் ஆணையர்களை செயல்படவிடாமல் தடுத்துள்ளார் என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.*

*மூன்று நபர் ஆணையமாக செயல்படும் தேர்தல் ஆணையத்தின் முடிவுகள் அனைத்துமே ஒருமித்த கருத்தாக இருக்க வேண்டும் தவிர, தலைமை தேர்தல் ஆணையரின் முடிவாக மட்டும் இருக்க கூடாது என்று சுட்டிக் காட்டியுள்ளார். டி.என்.சேஷன் வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் முக்கிய அம்சங்களை தலைமை தேர்தல் ஆணையர் மீறியுள்ளார் என்று அக்கடிதத்தில் வழக்கறிஞர் பிரிஜேஷ் சிங் தெரிவித்துள்ளார்.*

*உச்சநீதிமன்ற விதிகளின்படி, தலைமை தேர்தல் ஆணையர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர, ஒன்றிய அரசின் அட்டார்னி ஜெனரலின் அனுமதி தேவை என்பதால் இந்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*